P1-Q

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

G. C. E. Ordinary Level | க.பொ.த. சாதாரண தரம் | **2022 (2023)**

# Student Seminar Series

## மாணவர் கருத்தரங்கு தொடர்

Practice Paper | முன்னோடி வினாப்பத்திரம்

# Drama & Theatre

# நாடகமும் அரங்கியலும்



**Questions Paper - I, II** | வினாப்பத்திரம் - I, II (மொழிமூலம்–தமிழ்)

Nenasa
The National e-learning Portal for The General Education
தொலைக்கல்வி மேம்பாட்டு பிரிவு | கலைப்பிரிவு

දුරස්ථ අධ්‍යාපන ප්‍රවර්ධන ශාඛාව ජාතික භාෂා සහ මානව ශාස්ත්‍ර ශාඛාව

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
**Ministry of Education, Sri Lanka**

| 51 | T | I, II |
|---|---|---|

අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය - ශිෂ්‍ය සම්මන්ත්‍රණ මාලාව - 2022 (2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை- மாணவர் கருத்தரங்கு தொடர்- 2022 (2023)
**G. C. E. Ordinary Level Examination – Student Seminar Series - 2022 (2023)**

I, II
நாடகமும் அரங்கியலும் I, II
**Drama & Theatre I, II**

පැය තුනයි.
மூன்று மணித்தியாலம்
Three Hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි.
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time – 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## நாடகமும் அரங்கியலும் I

❖ **கவனிக்க**

(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பெற்ற விடைகளில் **சரியான** அன்றேல் **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

(iii). **உமக்கு வழங்கப்பெற்றுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (x) இடுக.**

(iv). **அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.**

1. நாடகத்தின் பிரதான அம்சமாகக் கருதத்தக்கது,
   (1) நெறியாள்கை (2) சொல்லாடல்
   (3) செயலியக்கம் (4) மோதுகை

2. மேல்வருவனவற்றுள் கணப்பிரசன்னத் தன்மையற்ற கலைவடிவமாகக் கொள்ளத்தக்கது,
   (1) நாடகம் (2) சிறுகதை
   (3) வில்லிசை (4) நடனம்

3. ‘‘இரும்பும் காந்தமும்’’ என்ற அரங்கச் செயற்பாட்டுக்கு ஊடாக முனைப்புறுத்தக்கூடியது
   (1) போலச்செய்யும் பண்பு (2) கற்பனா சக்தி
   (3) தலைமத்துவப் பண்பு (4) முன்முயற்சி.

4. அரங்கின் கலைத்துவப் பெறுமானங்களுக்கான திட்டமிடல்களுடன் தொடர்புடைய செயற்பாடாகக் கொள்ளத்தக்கது,
   (1) நாடகத் தயாரிப்பு (2) நெறியாள்கை
   (3) மேடை முகாமைத்துவம் (4) அசைவியக்க வடிவாக்கம்

5. நாடகமொன்றின் தயாரிப்புக் கருத்தைக் காட்சிக் கருத்தாக மாற்றுவதற்கான கலைத்துவச் செயற்பாட்டிற்குப் பங்களிப்பவர் **அல்லாதவர்**
   (1) மேடை முகாமையாளர் (2) வேட உடை விதானிப்பாளர்
   (3) நெறியாளர் (4) காட்சிவிதானிப்பாளர்.

6. அரங்கில் மேடைப்பொருள்கள், கைப்பொருள்கள் காட்சித்தட்டிகள், தட்டுமுட்டுக்கள், சுவர்மாட்டிகள் போன்றவற்றின் முதன்மைப் பங்களிப்பாக எடுத்துக்கொள்ளக்கூடியது, அவை:

(1) நெறியாளரின் தயாரிப்புச் சிந்தனைக்கு வடிவம் தருவன.

(2) நாடகத்தின் வெற்றிக்குப் பங்களிப்பவை.

(3) அரங்கில் நிகழ்வின் செயல் நடைபெறுகின்ற சூழலை வடிவமைத்துத் தருபவை.

(4) பார்ப்போரை ஆற்றுகையுடன் செயல்முனைப்பாக ஈடுபடுத்துபவை.

7. ஆரொடு நோகேன் நாடகத்தில் கரு இசை பயன்படுத்தப்படக்கூடிய மிகப் பொருத்தமான சந்தர்ப்பம் **அல்லாதது,**

(1) சுபத்திரா கையில் யூனிபோமுடன் பிரவேசித்தல்.

(2) பாடகர் குழுவினர் எடுத்துரைஞர்களாகி வீட்டின் நிலையை எடுத்துரைத்தல்.

(3) அம்பிகை வாயிற்படிக்கட்டில் ஏறிநின்று தனிமொழி பகருதல்.

(4) "இந்த வீட்டில எல்லாம் முடியத்தான் போகுது!" என்று கூறிவிட்டு ரஜீவ் வெளியேறுதல்.

8. 'ஏளன நகை புரிதல்', 'மூன்றாம் பாசலைக் கொடுத்து', 'அம்மி அரைக்கும் ஒலி' ஆகியவை முறையே

(1) உணர்ச்சி, ஒளி, செயல் சார்ந்த மேடைக்குறிப்புக்களைச் சுட்டுபவை.

(2) உணர்ச்சி, செயல், ஒலி சார்ந்த மேடைக்குறிப்புக்களைச் சுட்டுபவை.

(3) செயல், உணர்ச்சி, காட்சி சார்ந்த மேடைக்குறிப்புக்களைச் சுட்டுபவை.

(4) செயல், காட்சி, ஒலி சார்ந்த மேடைக்குறிப்புக்களைச் சுட்டுபவை.

9. மேல்வருவனவற்றில் ஆடல் சார் அசைவியக்க வடிவாக்கத்துடன் தொடர்புடைய செயலியக்கமாகக் கொள்ளத்தக்கது,

(1) பாடல் ஆடல்களில் ஈடுபட்டிருக்கும் பாடற் குழுவினரை ராஜ்குமார் விரட்டுதல்.

(2) மன்னவன் தூண்டில் மூலம் மீன் பிடிப்பதில் ஈடுபட்டிருத்தல்.

(3) அம்பிகை ஆரணி, சரோஜினிக்கு இடையில் ஏற்படுகின்ற முரண்பாட்டு நிலை.

(4) இடி, மின்னல். புயற் கோலங்கள்.

10. குறிப்பிடத்தக்க வர்ணங்கள் மூலம் பாத்திரத்தைச் சுட்டும் அரங்க வடிவங்களின் தொகுதி

(1) கூத்து, இசை நாடகம் (2) வயாங்குலிட், கபுக்கி

(3) கதகளி, பீஜிங் ஒபேறா (4) கோலம, சொக்கறி.

11. மேல்வரும் ஒப்பனை முறைகளில் அணிதல் முறையைக் குறித்து நிற்பது

(1) மாயனுக்குப் பயன்படுத்தப்படும் தாடி.

(2) மறைக்காடர் நெற்றியில் திருநீறு வைத்திருத்தல்.

(3) கோரஸ் குழுவினர் நெற்றியில் அலைகள் போன்ற வடிவத்தைப் பயன்படுத்தியிருத்தல்.

(4) போதை அரக்கன் வேடமுகத்தைப் பயன்படுத்திச் சித்திரிப்பில் ஈடுபடுதல்.

12. புதியதொரு வீடு நாடகத்தில் திருமணக் காட்சியின் போது பயன்படுத்தப்படக்கூடிய ஒளியின் தன்மை

(1) அடர்த்தியான ஒளிக்கற்றைகள்
(2) பரவிச் செல்லும் வகையிலான ஒளி.
(3) அரங்கின் ஒரு பகுதிக்கு மாத்திரம் பயன்படுத்தப்பெறும் விதத்திலான ஒளி.
(4) ஒளியின் செறிவைக் கூட்டிக் குறைக்கும் வகையிலானது.

13. நாடக ஆற்றுகையைப் பார்ப்பதனால் பார்ப்போரிடத்தே எழும் கதாஸிஸ், ரஸ, யூஜின் என்ற விதத்திலான ரசனை உணர்வுகளைக் குறிப்பிடும் அரங்கப் பண்பாடுகளுக்குரிய நாடுகள் முறையே

(1) கிரேக்கம், இந்தியா, ஜப்பான் (2) சீனா, இந்தோனேசியா, ஜப்பான்

(3) இத்தாலி, பிரான்ஸ், ரஷ்யா (4) கிரேக்கம், ஜப்பான், இந்தியா.

14. ஊமச் சித்திரிப்பில் ஈடுபடும் நடிகரொருவர் பிரதானமாகப் பயிற்சி பெறவெண்டியது

(1) உடல், குரல் என்பவற்றை முனைப்புறுத்துவதற்கு.

(2) உடலையும் உணர்ச்சிகளையும் முனைப்புறுத்துவதற்கு.

(3) தலைமைத்துவம், தொடர்பாடல் என்பவற்றை முனைப்புறுத்துவதற்கு.

(4) இசையையும் சத்தங்களையும் முனைப்புறுத்துவதற்கு.

15. அரங்கில் நான்காவது சுவரொன்றை உருவாக்குவதாக விமர்சிக்கப்பெறும் அரங்கவெளி

(1) படச்சட்ட மேடை (2) வட்டக்களரி (3) கரளிய (4) தெருவெளி

16. ''படைப்பாக்கச் செயற்பாடுகளைக் கட்டியெழுப்புவதற்கு இன்றியமையாதது'' எனக் கருதப்பட **முடியாதது**

(1) உடல் - உள ஒத்திசைவு.

(2) சித்திரிப்புத் திறனை விருத்தி செய்தல்.

(3) உளத்தடைகளை உருவாக்காத சூழல்.

(4) கட்டுப்படுத்தப்பெற்ற மனம்.

17. 'ஆடும் வீடும்' என்ற அரங்க விளையாட்டின் வழியாக விருத்தி செய்யத்தக்க திறன் **அல்லாதது**

(1) கணப்பொழுதில் தீர்மானம் எடுத்தல் (2) பேச்சு நுட்பங்களைக் கூர்மைப்படுத்தல்.

(3) கேட்டல்-கிரகித்தல் (4) உடலின் இயங்குநிலையைத் துரிதமாக்குதல்.

18. குழுநிலையில் அரங்கச் செயற்பாடு ஒன்றைப் புதிதளிப்பதற்கான செயன்முறைகளில் பொருத்தமற்றதாகக் கருதப்படத்தக்கவற்றின் தொகுதி

(1) ஒத்திகையும் போலச்செய்தலும் (2) ஒத்துணர்வும் குழும முயற்சியும்

(3) தொடர்பாடலும் தீர்மானம் எடுத்தலும் (4) கற்பனையும் படைப்பாக்கத்திறனும்

19. நாடக எழுத்துருவிற்கு ஊடாக நாடகமொன்று பிரதானமாக வளர்த்துச் செல்லப்படுவது

(1) வேட உடை, ஒப்பனை மூலம்.

(2) அரங்கப் பயிற்சிகள் மூலம்.

(3) பாத்திரச் சொல்லாடல்கள் மற்றும் மோதுகை மூலம்.

(4) பாத்திரச் செயலியக்கங்கள் மூலம்.

20. நாடக ஆசிரியரின் கருத்து நிலையைப் பார்ப்போர் முன்னிலையில் காட்சி நிலையாகப் படைப்பதற்கு நெறியாளரின் கருவியாகத் தொழிற்படுபவர்,

(1) நடிகர் (2) காட்சி விதானிப்பாளர்

(3) மேடைமுகாமையாளர் (4) வேட உடை விதானிப்பாளர்

21. ''மனிதர்கள் உயிர்க்க வேண்டும்'', ''என்னடி உந்தன் கோப்பியில்'' ஆகிய நாடகப் பாடல்கள் இடம்பெற்றுள்ள நாடக எழுத்துருக்களின் ஆசிரியர்கள் முறையே

(1) மஹாகவி து. உருத்திரமூர்த்தி, இ. முருகையன்

(2) இ. முருகையன், சி. மௌனகுரு

(3) அ. தாசீஸியஸ், நா. சுந்தரலிங்கம்

(4) ம. சண்முகலிங்கம், சி. மௌனகுரு

22. மோடியுற்ற நடிப்புப் பாங்கு வெளிப்படாத அரங்க வடிவம்

(1) கூத்து (2) தெருவெளி நாடகம்

(3) தெருக்கூத்து (4) இயல்புநெறி அரங்கு

23. சாதாரண வாசிப்பில் இருந்து நாடக வாசிப்பை **வேறுபடுத்தும்** அம்சங்களில் முதன்மையானது,

(1) பாத்திரப் பண்புகளை உணர்ந்து வாசிப்பதாகும்.

(2) நிறுத்தற் குறிகளை அவதானித்து வாசிப்பதாகும்.

(3) சொல்லாடல்களுக்கு அழுத்தம் கொடுத்து வாசிப்பதாகும்.

(4) மெய்யசைவுகள் இன்றித் தனியே குரலை மாத்திரம் பயன்படுத்தி வாசிப்பதாகும்.

24. மேல்வருவனவற்றில் பெருமளவிற்கு யதார்த்தப் பாணிச் சொல்லாடல்களைப் பயன்படுத்தியுள்ள நாடகம்

(1) புதியதொரு வீடு (2) ஆரொடு நோகேன்

(3) கந்தன் கருணை (4) சங்காரம்.

25. பாத்திரமொன்றின் சமூகவியற் குணாம்சம் என்பதில் **உள்ளடங்காதது,**

(1) வயது (2) தொழில் (3) கல்வித் தகுதி (4) சமயம்

26. புதியதொரு வீடு நாடகத்தில் பயன்படுத்தப்பெற்ற கைப்பொருள்களின் தொகுதி

(1) சீப்பு, கைத்தடி, சீருடை (2) நிலைக்கண்ணாடி, மேசை, கதிரை

(3) தூண்டில், வானொலிப் பெட்டி, சவள் (4) வாயிற்படிக்கட்டு, தையல் இயந்திரம், குடிசை

27. ஈழத்தில் எண்பதுகளில் உருவான அரங்கு

(1) யதார்த்த அரங்கு (2) வர்க்க முரண் நிலைப்பட்ட அரங்கு.

(3) கூத்தரங்கு (4) மாற்றரங்கு.

28. புதியதொரு வீடு நாடகத்தில் ''எறிகின்ற கடல் என்று மனிதர்கள் அஞ்சார்…'' என்கிற பாடல் வரிகள் ஊடாக உணர்த்தப்படுவது

(1) மீனவர்களின் வாழ்வியல் நெருக்கடி.

(2) எத்தகைய துயரங்களையும் சவாலாக ஏற்றுத் துணிவோடு முன்செல்ல வேண்டும்.

(3) கடற்கொந்தளிப்பை எப்போதும் எதிர்பார்த்திருக்க வேண்டும்.

(4) கடலில் மிகுந்த அவதானமாகச் செல்ல வேண்டும்.

29. காத்தவராயன் கூத்து, காமன் கூத்து, அருச்சனன் தபசு ஆகிய கூத்துக்களுக்குப் பொதுவானதாக அமைந்துள்ள ஒரு பண்பு

(1) திட்டவட்டமான ஆற்றுகை வெளிப் பயன்பாடு இன்மை.

(2) திட்டவட்டமான தாளக்கட்டுகள் பயன்படுத்தப்பெறுதல்.

(3) லாவணிப் பாடல்கள் இடம்பெற்றிருத்தல்

(4) அ.்.றிணைப் பாத்திரங்கள் இடம்பெற்றிருத்தல்.

30. 'சிட்டுப் பயல்களே…' என்று தொடங்கும் பாடல் இடம்பெற்றிருக்கும் இசைநாடகம்

(1) மயானகாண்டம் (2) வள்ளி திருமணம்

(3) பக்த நந்தனார் (4) சத்தியவான் சாவித்திரி.

31. மேல்வருவனவற்றில் ஆக்கபூர்வமான விமர்சனமொன்றின் பண்பாக **அமையாத** கூற்று

(1) விமர்சனம் படைப்பொன்றை ஆக்குவதற்கான சக்தியாக விளங்க வேண்டும்.

(2) படைப்பை மேலும் மேம்படுத்துவதற்கான உந்துசக்தியை வழங்க வேண்டும்.

(3) படைப்பில் உள்ள குறைகளைத் தேடிக் கண்டுபிடித்து முன்வைக்க வேண்டும்.

(4) படைப்பொன்றின் அனைத்து அம்சங்களையம் ஆழமாக ஆராய்ந்து விமர்சிக்க வேண்டும்.

32. புதியதொரு வீடு நாடகத்தில் ''மயிலி கோயிலில் வந்திருந்து அழும்'' காட்சியில் பங்குகொள்ளாத பாத்திரம்

(1) மாசிலன் (2) மன்னவன் (3) மையுண்ட நெடுங்கண்ணாத்தை (4) மறைக்காடர்

33. மேல்வருவனவற்றில் மிருதங்கம், ஹார்மோனியம் ஆகிய வாத்தியங்களைப் பயன்படுத்தி ஆற்றுகை செய்யப்பெறும் கூத்துக்களின் தொகுதி,

(1) வடமோடி, வடபாங்கு (2) தென்மோடி, தென்பாங்கு

(3) கோவலன் கூத்து, நாட்டை (4) காத்தவராயன், வசந்தன்.

34. ஈழத்தில் கட்டவிழ், தளைநீக்க அரங்கச் செயற்பாடுகளுடன் தன்னைத் தீவிரமாக ஈடுபடுத்திக் கொண்ட அரங்க ஆளுமை

(1) க. சிதம்பரநாதன் (2) ம. சண்முகலிங்கம் (3) அ. தாசீஸியஸ (4) க. பாலேந்திரா

35. மேல்வருவனவற்றில் பூங்குடிலை ஆற்றுகை வெளியாகக் கொண்ட சடங்கு

(1) குளிர்த்தி (2) தொவில் (3) ரட்டகும (4) வேட்டைத் திருவிழா

36. அருகிலுள்ள படத்தில் காட்டப்பெற்றுள்ள ஒப்பனை மேற்கொள்ளப்பெறுவதற்கு அதிகம் பொருத்தமான அரங்கு



(1) தெருவெளி அரங்கு.
(2) கூத்தரங்கு.
(3) யதார்த்த அரங்கு.
(4) சிறுவர் அரங்கு.

37. அருகில் உள்ள படத்தில் காட்டப்பெற்றுள்ள நாடக ஆளுமையைச் சிறப்பித்து நூல் ஒன்றை எழுதியவர்,



(1) கா. சிவத்தம்பி (2) செ. அன்புராசா
(3) காரை செ. சுந்தரம்பிள்ளை (4) பா. இரகுவரன்

38. அருகில் காட்டப்பெற்றுள்ள படத்தில் வெளிப்படுத்தப்பெறும் உணர்ச்சி



(1) பயம்
(2) வியப்பு
(3) அருவருப்ப
(4) மகிழ்ச்சி

39. அருகில் காட்டப்பெற்றுள்ள இசைக்கருவியைப் புதியதொரு வீடு நாடகத்தில் பயன்படுத்துவதற்கு மிகப் பொருத்தமான சந்தர்ப்பமாகக் கருதப்படக்கூடியது,



(1) ஆட்கள் அலையாகவும் புயலாகவும் ஆடுதல்.
(2) மன்னவன், மாசிலன், மயிலி ஆகியோர் வானொலி கேட்டல்.
(3) மாயனின் வருகையால் ஏற்பட்ட அதிர்ச்சிக்குப் பின்.
(4) மயிலி மாசிலனுக்குச் சோற்றுக் குழையல் கொடுத்தல்.

40. அருகில் காட்டப்பெற்றுள்ள அரங்காற்றுகை நடைபெறும் வெளி



(1) கரளிய (2) தானாயம்பொல
(3) வட்டக்களரி (4) களத்துமேடு

(40 x 1= 40 புள்ளிகள்)

දුරස්ථ අධ්‍යාපන ප්‍රවර්ධන ශාඛාව ජාතික භාෂා සහ මානව ශාස්ත්‍ර ශාඛාව

අධ්‍යාපන අමාත්‍යාංශය
**கல்வி அமைச்சு**
**Ministry of Education, Sri Lanka**

| 51 | T | I, II |
|---|---|---|

**අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය - ශිෂ්‍ය සම්මන්ත්‍රණ මාලාව - 2022 (2023)**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை- மாணவர் கருத்தரங்கு தொடர் - 2022 (2023)**
**G. C. E. Ordinary Level Examination – Student Seminar Series - 2022 (2023)**

| | |
|---|---|
| පුරවැසි අධ්‍යාපනය | I, II |
| **நாடகமும் அரங்கியலும்** | **I, II** |
| **Drama & Theatre** | **I, II** |

## நாடகமும் அரங்கியலும் II

❖ முதலாம் வினாவுக்கும் ஏனையவற்றுள் எவையேனும் நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

1. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.
   i. பார்வை நடிகர் (Spect Actor) எனப்படுபவர் யார்? 01 புள்ளி)
   ii. மங்கலாக்கி/ தணிகருவியின் பிரதான பயன்பாடு யாது? (01 புள்ளி)
   iii. ‘‘மாத்துப் பூசுதல்’’ எனப்படுவது யாது? (01 புள்ளி)
   iv. புதியதொரு வீடு நாடகத்தில் எடுத்துரைஞர் குழுவினருக்கான ஒப்பனை மேற்கொள்ளப்பெறும் மோடி எது? (01 புள்ளி)
   v. நுண்கலைகளுள் உள்ளடக்கப்பெறாத ஆற்றுகைக் கலை ஒன்று தருக. (01 புள்ளி)
   vi. வாள் மாற்றும் செயல் இடம்பெறும் சடங்கு எது? (01 புள்ளி)
   vii. தொழில்சார் அரங்கில் நாடக எழுத்துருவைத் தெரிவு செய்பவர் யார்? (01 புள்ளி)
   viii. செவிப்புலனாகும் கலைப்படைப்பு ஒன்றைத் தருக. (01 புள்ளி)
   ix. சிறுகதைக்கும் மேடை நாடகத்திற்கும் இடையிலான ஒத்த அம்சங்கள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)
   x. ஊமத்தின் வகைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

2. (i) நாடக நெறியாள்கை என்ற எண்ணக்கருவிற்கு விளக்கம் தருக. (04 புள்ளிகள்)
   (ii) நாடக எழுத்துருவிற்கு உயிர் கொடுக்கும் விதத்தில் அமையக்கூடிய நெறியாள்கைச் செயற்பாடுகள் யாவை? (04 புள்ளிகள்)
   (iii) நாடகம் ஒன்றை நெறியாள்கை செய்த அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு நீர் நடிகர்களைத் தெரிவுசெய்த விதம் பற்றி எடுத்துக் கூறுக. (04 புள்ளிகள்)

3. (i) அரங்கில் தொழிற்படும் நடிகருக்கான தயார்ப்படுத்தற் பயிற்சிகள் இரண்டையும் நடிப்பிற்கான பயிற்சிகள் இரண்டையும் தருக (04 புள்ளிகள்)
   (ii) ஆரொடு நோகேன் நாடகத்தில் நீர் ஏற்று நடித்த பாத்திரம் ஒன்றைக் குறிப்பிட்டு அந்தப் பாத்திரத்தைச் சித்திரிப்பதற்குக் கையாண்ட நடிப்ப நுட்பங்கள் நான்கைத் தருக. (04 புள்ளிகள்)
   (iii) நீர் பெற்றுக் கொண்ட அரங்கப் பயிற்சிகள் உமது ஆளுமை விருத்திக்கு உதவிய சந்தர்ப்பங்கள் இரண்டைத் தந்து விளக்குக. (04 புள்ளிகள்)

4. (i) புதியதொரு வீடு நாடகத்தின் மையக்கரு, மோதுகை என்பவற்றைத் தருக. (04 புள்ளிகள்)

(ii) மேற்படி நாடகத்தில் மாயன் மீண்டு வரும் சந்தர்ப்பத்தில், 'நீர் மயிலியாக இருந்தால்'' பேசக்கூடிய சொல்லாடல்களையும் செயல்களையும் எழுதுக. (04 புள்ளிகள்)

(iii) மேலே வினா (i) இற்கு உம்மால் முன்வைக்கப்பெற்ற மையக்கருவை ''மாண்டது போல மயங்கி வீழ்ந்திடில் நாம் மனிதரா? மறுபடியும் துணிவோம்.'' என்ற சொல்லாடற் பகுதியுடன் ஒப்பிட்டுக் கருத்துரைக்குக. (04 புள்ளிகள்)

5. (i) யாழ்ப்பாணப் பிரதேசத்தில் ஆடப்பெறும் கூத்துக்கள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

(ii) மேலே வினா (i) இற்கு உம்மால் குறிப்பிடப்பெற்ற கூத்துக்களில் யாதாயினும் இரண்டின் ஆற்றுகைப் பண்புகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) கூத்தில் வரும் கட்டியகாரனின் பணிகள் இரண்டைக் குறிப்பிட்டு, அவற்றை நவீன நாடக எடுத்துரைஞரின் பணிகளுடன் ஒப்பிடுக. (04 புள்ளிகள்)

6. பாஸ்கா, ரட்டகும ஆகிய சடங்காற்றுகைகளின்

(i) ஐதிகம் (04 புள்ளிகள்)

(ii) நிகழ்த்து முறை (04 புள்ளிகள்)

(iii) அரங்க ஆற்றுகைப் பண்புகள் (04 புள்ளிகள்)

என்பவற்றைக் குறிப்பிடுக.

7. மேல்வரும் தலைப்புக்கள் மூன்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) அரங்க இசை

(ii) நா. சுந்தரலிங்கம்

(iii) தொலைக்காட்சி நாடகம்

(iv) ஒளிக்குறிப்புக்கள்

(v) பார்ஸி நாடகம். (04 x 3=12 புள்ளிகள்)